# திருவேற்காடு நகராட்சி
## நகர்மன்ற அவசரக் கூட்டம்

**2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 6ம் நாள் புதன்கிழமை மாலை 05.30 மணிக்கு திருவேற்காடு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் நகர்மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**நகராட்சி அலுவலகம்,**
**திருவேற்காடு**
**நாள்: 06.11.2019**

**தனி அலுவலர் (ம) ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

---

**பொருள் எண். 1**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பழுதடைந்த கீழ்க்கண்ட சாலை பணிகளை 3 சிப்பங்களாக ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் 2019–2020–ன் கீழ் (Phase-II) கூடுதல் பணிகளாக மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.872, நாள்.30.09.2019–ன்படி நகர்மன்ற ஒப்புதல் பெற்று உரிய நிதி ஒதுக்கீடு கோரி கருத்துரு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கு சமர்பிக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | சிப்பம் எண் | வார்டு எண். | பணியின் விபரம் | நீளம் (கி.மீ) | அகலம் (மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | I | 1,3,4 &18 | செட்டி தெரு பிரதான சாலை, கருமாரியம்மன் நகர் பிரதான சாலை, கோலடி பிரதான சாலைகளை அகலப்படுத்தி தார்தளம் அமைத்தல், எட்டீஸ்வரன் கோயில் தெரு மற்றும் யாகவ மங்கள் ராஜ் தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல். | 4.121 | 4.10 - 6.00 | 200.00 |
| 2. | II | 3,4,5,15, 16,17& 18 | அம்பாள் நகர் பிரதான சாலை, சூரியநாராயணன் நகர், காவெட்டி பிள்ளையார் கோயில் தெரு, செல்லியம்மன் நகர், ராம் நகர், ட்டி.ட்டி.எஸ் நகர், பெரியகோலடி, விக்னேஷ் நகர், எஸ்(அன்)பி குடியிருப்பு, பாரதியார் 2வது தெரு மற்றும் ஆச்சி தெருவிற்கு தார்தளம் புதுப்பித்தல். | 5.339 | 4.10 - 6.00 | 200.00 |
| 3. | III | 1,3,9,11 &12 | விஜய் நகர் பிரதான சாலை, விஜய் நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது குறுக்கு தெரு, 5வது குறுக்கு தெரு, 7வது குறுக்கு தெரு, பி.கே.எம் சாலை, கலைஞர் கருணாநிதி தெரு, ஸ்ரீ கிருஷ்ணா நகர் பிரதான சாலை, 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, 4வது தெரு, 5வது தெரு, 6வது தெரு, ஜெய் நகர் செல்லம்மாள் தெரு, பாலாஜி நகர் 1வது தெரு, 1வது குறுக்கு தெரு, பாலாஜி நகர் 2வது தெரு, எம்.ஜி.ஆர் நகர் பிரதான சாலை, புறநகர், சண்முகா நகர் 1வது தெரு, 2வது தெரு, 3வது தெரு, காமராஜ் தெரு 1வது குறுக்கு தெரு, அம்மன் நகர் பிரதான சாலை, அம்மன் நகர் 1வது தெரு மற்றும் 3வது தெருக்களுக்கு தார்தளம் புதுப்பித்தல். | 5.819 | 4.10 - 5.00 | 200.00 |
| | | | **மொத்தம்** | **15.279** | | **600.00** |

மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, தலைமை செயலகம் அவர்களின் தலைமையில் 04.11.2019 அன்று நடைபெற்ற திட்ட அனுமதி குழுவில் திருவேற்காடு நகராட்சியில் சாலை பணிகள் ரூ.6.00 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள பொருள் கொண்டுவரப்பட்டு, பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான நிதி

ஒதுக்கீடு செய்து ஒப்புதல் அளித்து கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது அதன் விபரம் பின்வருமாறு

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மான்ய நிதி | – | ரூ | 5.40 | கோடி |
| நகராட்சி பங்களிப்பு | – | ரூ | 0.60 | கோடி |
| **மொத்த மதிப்பீடு** | **–** | **ரூ** | **6.00** | **கோடி** |

**அலுவலக குறிப்பு :-**

அ) மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள விபரத்தினை ஏற்று, நகராட்சி பங்களிப்பினை ஈடு செய்திடவும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய நிர்வாக அனுமதி பெற கருத்துருவினை மேலனுப்பிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.905** **நாள்.06.11.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.2

திருவேற்காடு நகராட்சி பகுதியில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீதேவி கருமாரியம்மன் திருக்கோயில் மற்றும் ஸ்ரீவேதபூரிஸ்வரர் ஆகிய திருத்தலங்கள் உள்ளதால் பொது மக்கள் தினந்தோறும் அதிக அளவில் வந்து செல்கின்றனர். மேலும், இந்நகராட்சியில் 13 அரசு பள்ளிகள், 6 கல்லூரிகள், 2 மசூதி, 15 திருமண மண்டபங்கள் அடங்கியுள்ளது. ஆகவே, திருவேற்காடு நகராட்சி எல்லையில் அடிக்கடி கோயில் திருவிழாக்கள் நடைபெறுவதால் முக்கிய பிரமுகர்களின் (V.I.P) வருகை அதிக அளவில் உள்ளது. எனவே, பொதுமக்களின் பாதுகாப்பு நலன் கருதியும், இந்நகர் பகுதியில் எவ்வித அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படவண்ணம் பொதுமக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கிட காவல் ஆய்வாளர், சட்டம் மற்றும் ஒழுங்கு, T5 காவல் நிலையம், திருவேற்காடு அவர்களின் கடித ந.க.எண்.42T5.கா.நி.பொது2019, நாள்.25.09.2019–ன் படி முக்கிய சாலை சந்திப்புகளில் CCTV கேமரா அமைத்து தருமாறு கோரியுள்ளார்.

இதனை தொடர்ந்து, இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு எவ்வித அசம்பாவித நிகழ்வுகள் ஏற்படாமல் உரிய பாதுகாப்புகள் வழங்கிட முதற்கட்டமாக முக்கிய சாலை சந்திப்புகளில் CCTV கேமரா அமைக்க அதற்காக தோராய செலவினம் ரூ.9.80 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**அலுவலக குறிப்பு :-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

ஆ) பொதுமக்களின் பாதுகாப்பு அவசியம் கருதி ஆணையர் (ம) தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும், மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.906** **நாள்.06.11.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

## பொருள் எண்.3

இந்நகராட்சியில் இயங்கி வரும் பொலிரோ வாகன பதிவு எண். TN 20 CZ 0389 வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே, மேற்கண்ட வாகனத்தில் உள்ள பழுதுகளை சரிசெய்ய தயாரிப்பு நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற **M/s.India Garage.,** நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ளவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

அ) அனுமதி அளிக்கலாம்.

ஆ) மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின் செலுத்திடவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

இ) மேற்கண்ட வாகன பயன்பாட்டின் அவசியத்தினை கருதி நகர்மன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் (ம) ஆணையர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை தொடர்ந்தமைக்கும், செலவினத்திற்கும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.907** **நாள்.06.11.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.4</u>**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதாரப் பிரிவில், பொது சுகாதார பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் டாடா ஏ.சி. வாகனம் பதிவு எண். TN12-U-1072, TN12-U-1038, TN12-J-8957, மற்றும் டிப்பர் லாரி TN12-V-7786, வாகனங்களுக்கு வருடாந்திர தகுதி சான்று (F.C) பெற வேண்டி உள்ளதால் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தின் வாகனத்தின் பழுதுகள் சரிசெய்து கொள்ள இதற்கென ஆகும் செலவீனத்திற்கும் மற்றும் வட்டார போக்கு வரத்து அலுவலத்தில் தகுதிசான்று பெற சாலை வரி , பசுமை வரி மற்றும் இதரவரிகள் உள்பட ஆகும் செலவீனத்திற்கும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் தொகை ரூ.7.00 இலட்சதிற்கு பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.908 நாள்.06.11.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**<u>பொருள் எண்.5</u>**

திருவேற்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட 18 வார்டுகளிலும் கொசுக்களினால் பரவக்கூடிய டெங்கு காய்ச்சல், காலரா, டைபாய்டு, பன்றிக்காய்ச்சல் மற்றும் சிக்குன்குனியா போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்க இந்நகராட்சி முழுவதும் உள்ள பகுதிகளில் நோய் தடுப்பு நடவடிக்கை பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (IEC) பொது மக்களுக்கு வழங்கிட டெங்கு கொசு ஒழிப்பு வாசகங்கள் பதித்த ஸ்டிக்கர்கள், அறிவிப்பு நோட்டிஸ்கள், வால் போஸ்டர்கள் மற்றும் மல்டி கலர் பேனர்கள் அச்சடித்து சப்ளை செய்யவும் மற்றும் முக்கிய இடங்களில் டெங்கு கொசு ஒழிப்பு பேனர்கள் வைக்க தேவையான இரும்பு கம்பிகள் நட்டு வைத்து விளம்பரம் செய்யவும் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுறவு அச்சக நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று பணிகள் மேற்க்கொள்ளவும் இதற்கென ஆகும் தோராய செலவீனம் ரூ.5.00 இலட்சத்திற்கு பொது நிதியில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

அ) மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண்.909 நாள்.06.11.2019**

**தீர்மானம் : அனுமதி அளிக்கப்பட்டது.**

---

**ஒம்/-தனி அலுவலர் (ம)**
**ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**

/உண்மை நகல்/

**ஆணையர்,**
**திருவேற்காடு நகராட்சி.**